**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 19/2024**

**Prosecution Witness 1 (LW 1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுடலை வேல்முருகையா | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | பொ.சுப்பையா | தொழில் | : | உதவி இயக்குனர், அரசு மருந்துகட்டுப்ப ாட்டு துறை |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா/ மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.12.2024.

( எதிரி ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஓட்டுநர் உரிமம் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

## 2 முதல் 8 எ.த.கு.வி

| | |
|---|---|
| கேள்வி | மதுரை மண்டல மருந்து கட்டுப்பாட்டு துறைக்கு கீழ் தான் தேனி மருந்து கட்டுப்பாட்டு துறை வருகிறது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | மதுரைக்கு கீழ் அவ்வாறு எத்தனை சரகங்கள் வருகிறது என்றால்? |
| பதில் | உத்தமபாளையம் உட்பட 8 சரகங்கள். |
| கேள்வி | மதுரை மண்டலத்தில் முதுநிலை மருந்து ஆய்வாளர் உண்டு ? |

| | |
|---|---|
| பதில் | சரிதான் |
| கேள்வி | அவருடைய பணி என்ன ? |
| பதில் | அவர் மருந்து உற்பத்தி நிலையங்களை ஆய்வு செய்ய வேண்டும். |
| கேள்வி | நீங்கள் மருந்து ஆய்வாளராக அரசிதழில் எப்பொழுது பிரசுரம் செய்யப்பட்டது? |
| பதில் | 07.04.2010. |
| கேள்வி | தேனி சரகத்தில் எந்த கால கட்டத்தில் பணிபுரிந்தீர்கள்? |
| பதில் | 04.02.2010 முதல் பிப்ரவரி 2017 வரை. |
| கேள்வி | அரசிதழில் உங்கள் பதவி பிரசுரம் செய்யப்படாவிட்டால் சட்டப்படி நீங்கள் எந்த பணியும் மருந்து கட்டுப்பாடு சம்மந்தமாக செய்யக்கூடாது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | தேனி சரக ஆய்வாளர் மற்றொரு சரகத்திற்கு ஆய்வு செய்ய செல்ல வேண்டும் என்றால் மேலதிகாரியின் அனுமதி தேவை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | எவ்வாறு நீங்கள் ஆய்வறிக்கையை சமர்பிக்க வேண்டும் என்றால்? |
| பதில் | 2 வாரங்களுக்கு ஒரு முறை. மாதந்திர அறிக்கையும் தாக்கல் செய்யப்பட வேண்டும். |
| கேள்வி | இந்த வழக்கில் ஆய்வறிக்கைகள் ஏதம் சமர்பிக்கவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் பணிபுரியும் தேனி சரகத்தில் உள்ள சில்லறை மருந்து கடைகள், மொத்த மருந்து கடைகள் விபரங்கள் அடங்கிய விபரம் தங்களது அலுவலகத்தில் பராமரிக்கபட்டு வருகிறது என்றால்? |
| பதில் | சரிதான். நான் பணி செய்யும் காலத்தில் 350 முதல் 400 கடைகள் இருந்தது. |
| கேள்வி | ஒரு மாதத்திற்கு நீங்கள் எத்தனை மருந்து கடைகள் ஆய்வு செய்ய வேண்டும் என்றால் ? |
| பதில் | 50 ஆய்வுகள். |
| கேள்வி | ஒரு மாதத்திற்கு எத்தனை மாதிரிகள் பகுப்பாய்வுக்கு எடுக்க வேண்டும் என்று சொன்னால் ? |
| பதில் | குறைந்த பட்சம் 7 மாதிரிகள். |
| கேள்வி | ஒரு வருடத்திற்கு எத்தனை வழக்குகள் பதிவு செய்ய வேண்டும் என்ற வரம்பு உங்களுக்கு உண்டு என்றால்? |
| பதில் | இல்லை. |

| | |
|---|---|
| கேள்வி | ஒரு உரிமம் பெற்ற மருந்து இருக்கும் இடத்தை வருடத்திற்கு 2 முறையாவது ஆய்வு செய்ய வேண்டும்? |
| பதில் | 1 முறை. |
| கேள்வி | 3–வது எதிரி நிறுவனத்திற்கு சென்ற ஆய்வு சாதாராண ஆய்வு தான் புகாரின் பெயரில் அல்ல என்றால் ? |
| பதில் | பணி சம்மந்தப்பட்ட ஆய்வு தான். |
| கேள்வி | நீங்கள் மட்டும் தான் ஆய்வுக்கு சென்றீர்களா? |
| பதில் | ஆம். |
| கேள்வி | முதன் முதல் எத்தனை மணிக்கு ஆய்வுக்கு சென்றீர்கள்? |
| பதில் | மதியம் சுமார் 01.00 மணியளவில். 1 மணி நேரம் ஆய்வு செய்தேன். |
| கேள்வி | மேற்படி விபரத்தை உங்கள் புகாரில் சொல்லியுள்ளீர்களா? |
| பதில் | தேதி மட்டும் குறிப்பிட்டுள்ளேன். |
| கேள்வி | 3–வது எதிரியின் கடையில் யார் யார் இருந்தார்கள்.? |
| பதில் | 3–து எதிரி, மற்றும் தகுதிவாய்ந்த நபர் ஒருவர் இருந்தார். |
| கேள்வி | அவர் பெயர் என்ன ? |
| பதில் | மணிமுருகேசன் என்று தோன்றுகிறது. |
| கேள்வி | புகாரில் மணிமுருகேசன் பெயர் சொல்லவில்லை என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அந்த நிறுவனத்தில் இருந்த ஆய்வு புத்தகத்தை பார்த்தீர்களா? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | 3–வது எதிரி நிறுவனத்தில் மருந்து மாதிரி எடுக்கும் படிவம்–17 ல் சாட்சிகள் ஏதும் குறிப்பிடப்பட்டுள்ளதா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | Naccold syrup என்ற மருந்தை படிவம்–17 ல் எடுக்கப்பட்டது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | மேற்படி மருந்து பாட்டிலில் ஒட்டியுள்ள லேபிலில் உள்ள மருந்தின் உள்ளடக்கம், பெயர், உரிமை எண், தொகுப்பு எண், தயாரிப்பு மற்றும் காலாவதி தேதி விபரங்களை படிவம்–17 ல் பதிவு செய்தீர்களா ? |
| பதில் | சரிதான். மருந்தின் உள்ளடக்கம் பற்றி எழுதவில்லை. |
| கேள்வி | இதேபோல மற்ற மருந்து கம்பெனிகளின் லேபில்களிலும் மேற்சொன்னவாறு தகவல்கள் இருக்கும் என்றால்? |

| | |
|---|---|
| பதில் | சரிதான். |
| கேள்வி | 3–வது எதிரியின் கடையில் நீங்கள் மாதிரி எடுத்த மருந்துகள் தவிற வேறு கம்பெனி மற்றும் பெயர் கொண்ட மருந்துகள் இருந்ததா ? |
| பதில் | இருந்தன. |
| கேள்வி | அதில் எதாவது ஆய்வு செய்தீர்களா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | ஒரு மருந்தை மாதிரி எடுத்த உடனே அந்த பாட்டிலின் உள்ளே உள்ள மருந்தின் தரம் தெரியாது என்றால்? |
| பதில் | பாட்டிலின் நிறம் பொறுத்து தான் உள்ளே உள்ள மருந்தின் வெளிபுறத் தோற்ற தன்மை தெரியும். |
| கேள்வி | டிரான்ஸ்பரண்ட் பாட்டில்களில் உள்ள மருந்துகளின் தன்மை குறித்து பார்த்தவுடன் தெரியுமா? |
| பதில் | தெரியாது. பகுப்பாய்வுக்கு பிறகு தான் தரம் தெரிய வரும். மேற்படி Naccold syrup–ன் தரம் பகுப்பாய்வுக்கு பின் தான் தெரிய வந்தது. |
| கேள்வி | அந்த 3–வது எதிரியின் நிறுவனத்தில் எடுக்கப்பட்ட வேறு மருந்துகளின் தரமும் பகுப்பாய்வுக்கு பின் தான் தெரிய வந்தது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | மாதிரிகள் எடுக்கும்போது பின் பற்ற வேண்டிய நடைமுறைகளை பின்பற்றி தான் எடுத்தீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | புகாரில் நடைமுறை பற்றி சொல்லியுள்ளீர்களா? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | மாதிரிக்காக மருந்துகள் எடுக்கும் போது உங்களுக்கு சந்தேகம் வந்ததா? |
| பதில் | ஆய்வுக்கு முன்பு மேற்படி மருந்து கம்பெனியின் மீது சட்ட நடவடிக்கை எடுத்திருந்தால் சந்தேகம் இருந்தது. |
| கேள்வி | அதை புகாரில் சொல்லியுள்ளீர்களா? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | 3–வது எதிரிக்கு கொடுக்கப்பட்ட விளக்க அறிவிப்பில் கேட்கப்பட்ட தகவல்களுக்கு முறையான பதில் அளித்துள்ளாரா? |
| பதில் | கொடுத்துள்ளார். |
| கேள்வி | கொள்முதல் பில்கள், விற்பனை பில்கள், கடையின் உரிமத்தின் நகல்கள் மற்றும் விளக்கம் சமர்பித்துள்ளாரா? |
| பதில் | ஆம். |

| | |
|---|---|
| கேள்வி | 3–வது எதிரியின் நிறுவனத்தில் எடுக்கப்பட்ட மருந்தை உட்கொண்டு யாருக்கேனும் பாதிப்பு ஏற்பட்டதாக புகார் வந்ததா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | 3–வது எதிரி 2–வது எதிரியிடமும் மருந்துகள் வாங்கியுள்ளார் அவரிடமும் உரிமம் உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 3–வது எதிரி உங்களுக்கு அனுப்பிய விளக்கத்தில் தரம் தெரியாமல் தான் வாங்கி விட்டேன் என சொல்லியுள்ளாரா? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | பாட்டிலாக வாங்கிய மருந்து பொருளை மாற்றம் ஏதும் செய்யாமல் பாட்டிலாகவே விற்பனை செய்துள்ளாரா? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நான் வாங்கிய மருந்து பொருளை அறை வெப்பநிலையிலேயே பாதுகாத்து வந்தாரா என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 1–ம் எதிரிக்கும், மருந்து கட்டுப்பாட்டு துறைக்கும் நடைபெற்ற கடித போக்குவரத்து 3–ம் எதிரிக்கு தெரியுமா? |
| பதில் | தெரிய வாய்ப்பில்லை. |
| கேள்வி | படிவம்–18 ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மருந்து மாதிரிகளை அனுப்பியுள்ளீர்களா ? |
| பதில் | அலுவலகம் மதுரையில் உள்ளதால் அதற்கு மறு நாள் அனுப்பினேன். |
| கேள்வி | 1–ம் எதிரி நிறுவனத்தில் தயாரிக்கப்படும் மருந்துகள் தயாரிப்பு தொழில்நுட்ப நடைமுறைகள் 3–ம் எதிரிக்கு தெரியுமா? |
| பதில் | எனக்கு தெரியாது. |
| கேள்வி | 3–வது எதிரியை பொறுத்த மட்டிலும் மருந்து பொருட்களின் தரத்துக்கோ, மற்ற விதிமுறைகள் மீறல்களுக்கோ சம்பந்தம் இல்லை என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | மருந்து பொருட்களின் தரத்திற்கு தயாரிப்பாளர்கள் தான் பொறுப்பு என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 4–வது எதிரி நிறுவனத்திற்கு யார் யார் சென்றீர்கள் என்றால்? |
| பதில் | முதல் ஆய்வுக்கு நான் மட்டும் சென்றேன். |

4 எ.த.கு.வி: 3–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட

கேள்விகளிலும், பதில்களிலும் 4, 5, 6 என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

இருதரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை 04.01.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.12.2024 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2024.12.20 17:53:25 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
20.12.2024.